**இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - 2010**

---

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனமானது 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் எற்படும் தாக்கங்களைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின 2009 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 26

இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்தி கம்பனியின் வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தில் 80% கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக இருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 09

-----------------------------------------------------

(i) ரூபா 83,111 தொகையான வங்கி மேலதிகப் பற்று காசுப்பாய்ச்சலில் காசும் காசுக்குச் சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்து மாற்ற பட்டோலையின் பிரகாரம் ஆதனங்கள், இயந்திர உபகரணங்களின் கொள்வனவு ரூபா 21,750,432 தொகையான போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் இது ரூபா 21,220,000 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) ரூபா 833,218 தொகையான பொருள் கைதவிர்ப்பு இலாபம் மற்றும் விற்பனையினால் கிடைக்கும் தொகை, காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 18

-----------------------------------------------------

மீள்பெறுமதியிடப்படாது ரூபா 2,500,000 இற்கு கணக்கிடப்பட்ட ரூபா 5,776,000 தொகையான காப்புறுதியைப் பெற்றிருந்த WP – HB- 5048 ஆம் இலக்க வாகனம் முற்றாக சேதத்திற்கு உட்பட்டிருந்தது. இவ் வாகனம் மேற்குறித்த வகையில் சந்தைப் பெறுமதியைப் பார்க்கிலும் மிகக் குறைவான மீதிக்கு கணக்கிடப்பட்டிருந்த காரணத்தினால் காப்புறுதி நட்டஈடு பெறப்பட்டதை அடுத்து ரூபா 4,245,891 தொகையான வழமைக்கு மாறான இலாபம் நிதிக்கூற்றுக்களின் மூலம் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 10

-----------------------------------------------------

முன்னைய ஆண்டுகளில் நிதிசார் விளைவுகளுக்கு ஏற்படும் தாக்கங்களை வெளிப்படுத்தாது முன்னைய ஆண்டுச் சீராக்கங்களாக ரூபா 20,775,764 தொகை திரண்ட இலாபத்தில் இருந்து பதிவழிக்கப்படுவதற்கு மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

### 1.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வங்கி மீள்கொள்வனவுகளில் முதலீடு செய்யப்பட்டிருந்த காணி சுவீகரிப்பு நட்டஈடாகச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 597,145,882 தொகை குறுங்கால முதலீட்டின் கீழ் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக குறுங்காலமல்லாத முதலீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்வேறு நிறுவகங்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்ட ரூபா 1,753,479 தொகையான கடல் மண் இருப்பு சரியாகக் கணக்கிடப்பட்டு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்காததுடன் இப் பெறுமதியால் மண் இருப்பு பெறுமதி அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கணக்குகளின் பிரகாரமும் பட்டோலைகளின் பிரகாரமும் மீதிகளில் பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன் வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளில் அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

| விடயம் | கணக்கின் பிரகாரமான மீதி | பட்டோலையின் பிரகாரமான மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| நிலையான வைப்புக்கள் | 53,731,408 | 56,515,699 | 2,784,291 |
| பணிக்கொடைக் கொடுப்பனவிற்காக மேற்கொள்ளப்பட்ட முதலீடு | 253,386,151 | 251,867,332 | 1,518,819 |

(ஆ) கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து பெற வேண்டிய கடன் மீதி ரூபா 135,443,956 ஆன அதேநேரம் நகர அபிவிருத்தி அதிகாரசபையில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் காணி நிலமீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு தீர்க்கப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 136,289,125 ஆனமையால் ரூபா 845,160 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஆண்டின் இறுதியில் முன்கொண்டுவரப்பட்ட கொடுப்பனவுகளின் ரூபா 946,887 தொகை 05 ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலவிய போதிலும் அம் மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெத்தகான எனும் பெயர் கொண்ட செயற்திட்டம் தற்போது பூர்த்தியாக்கப்பட்டிருந்த போதிலும் 5 ஆண்டுகளுக்கு மேலான காலத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வேலை ஆரம்பிப்பு முற்பணத் தொகையான ரூபா 3,128,000 தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) வியாபாரக் கடன்பட்டோரின் மீதியில் உள்ளடக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்கு மேலாகக் காணப்பட்ட ரூபா 81,395,560 தொகையான கடன்பட்டோர் மீதியை அறவிடப்படுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் மொத்த வியாபாரக் கடன்பட்டோர் மீதி ரூபா 291,539,800 ஆனதுடன் இதில் ரூபா 148,101,606 தொகையான அதாவது மொத்தக் கடன்பட்டோரில் 50% ஆன நகர அபிவிருத்தி அதிகாரசபயிடம் இருந்து அறவிடப்பட வேண்டியதாகவும் அத் தொகையில் ரூபா 56,634,611 தொகை 5 வருட காலம் கடந்து நிலுவையாகக் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டது.

(உ) இலங்கை காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கம்பனியில் இருந்து 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனம் ரூபா 9,964,782 தொகை பெறவேண்டியதாக இருந்ததுடன் இவ்வாறிருக்கையில் கூட்டுத்தாபனம் உரிய கம்பனிக்கு ரூபா 2,054,249 தொகையான முற்பணத்தை வழங்கியிருந்தது.

(ஊ) அரச நிறுவகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த சேவைகளுக்காக பெற வேண்டிய ரூபா 155,200,000 தொகை அறவிடப்பட்டிராததுடன் வேலை பூர்த்தியான சில செயற்திட்டங்களுக்காக முற்பணங்களேனும் பெறப்படாது செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது.

(எ) நீண்ட காலமாக தீர்க்கப்படாதிருந்த ரூபா 68,208,560 தொகை நடைமுறைப் பொறுப்பின் கீழ் அட்டுறு செலவினமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இச் செலவில் ரூபா 65,984,338 தொகை வரியாக அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டியதாக அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| | **ரூபா** |
|---|---|
| நாட்டின் பாதுகாப்பு வரி | 15,178,378 |
| செலுத்தப்பட வேண்டிய பங்கிலாபம் | 2,224,222 |
| பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி | 269,412 |
| விற்பனைப் புரள்வு வரி | 17,972,468 |
| உள்ளூராட்சி நிறுவகங்களுக்கான நிலமீட்டல் வரி | 32,000,000 |
| அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய வரி | 564,080 |
| | -------------------- |
| கூட்டுத்தொகை | 68,208,560 |
| | ========= |

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமைகள்

காணி, நிலமீட்டல் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான ஓர் வாகனத்திற்கான சகல பராமரிப்புச் செலவினமும் கூட்டுத்தாபனத்தினால் செய்யப்பட்டிருந்த போதிலும் இது 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிவிற்கு முரணாக கூட்டுத்தாபன நடவடிக்கைகளுக்கு புறம்பான செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனச் செயற்பாடுகளின் வரிக்கு முன்னரான விளைவுகள் ரூபா 135,580,563 தொகையை இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான தேறிய இலாபம் ரூபா 295,932,406 உடன் ஒப்பிடும் போது நிதிசார் விளைவுகளில் ரூபா 160,351,843 தொகையான வீழ்ச்சியைக் காண்பித்தது. செயற்பாட்டு மற்றும் செயற்பாடற்ற வருமானக் குறைவும் நிர்வாக மற்றும் பொதுச் செலவினம் போன்று ஏனைய செயற்பாட்டுச் செலவின அதிகரிப்பும் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு வீழ்ச்சியடைவதற்கு காரணமாகவுள்ளன.

### 2.1.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த இருப்பு (மண் இருப்பு தவிர்ந்தவை) ரூபா 85,156,998 ஆனதுடன் இதில் ரூபா 44,379,439 ஆனவை மெதுவாக நகரும் இருப்புக்களாகும். இவை மொத்த இருப்புப் பெறுமதியில் 52% ஆகும். மெதுவாக நகரும் இருப்பில் 5 ஆண்டுகளுக்கு மேலான காலமாக களஞ்சியத்தில் இருந்த ரூபா 37,739,607 இருப்பும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் இப் பெறுமதி மெதுவாக நகரும் இருப்புப் பெறுமதியின் 85% ஆக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறே மொத்த இருப்புப் பெறுமதியில் மெதுவாக நகரும் இருப்பிற்காக ரூபா 42,770,981 தொகை ஒதுக்கமாக கழிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டிருந்தது.

## 2.2 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

### 2.2.1 பௌதீக செயலாற்றல்

--------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்தினால் 2010 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டத்தில் ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் குறிப்பாக இனங்காணப்பட்டிராமையால் 2010 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கையுடன் வருடாந்த செயற்பாட்டுத்திட்டம் ஒப்பிடப்படுவது சிக்கலானதாகக் காணப்பட்டதுடன் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான முரண்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) மீளாய்வாண்டின் போது அகழ்வுச் செயற்திட்டங்கள் இரண்டில் இருந்தும் நிர்மாணச் செயற்திட்டங்கள் 5 இல் இருந்தும் கழிவுகளை வெளியகற்றும் செயற்திட்டங்கள் மூன்றில் இருந்தும் வேறு செயற்திட்டங்களில் இருந்தும் கூட்டுத்தாபனம் ரூபா 44,826,964 தொகையான நட்டத்தை ஏற்றிருந்தது. முறையாக சாத்தியவளக் கற்கையின்றி செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்த காரணத்தினால் இந் நிலை ஏற்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

மேலும் இலாபக் கணிப்பீட்டின் போது ஒவ்வொரு செயற்திட்டத்திற்கும் மேந்தலைக் கிரயத்தைச் சீராக்கியிராததுடன் அவ்வாறு கணிப்பிடப்படுகையில் இந்நட்டம் மேலும் அதிகரிக்கும்.

(இ) லுணாவை சுற்றாடல் மேம்பாடு மற்றும் சமூக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் பிரதான வாய்க்கால் செயற்பாட்டு பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக ரூபா 216,630,221 பெறுமதியான இயந்திர உபகரணம் காணி சீர்திருத்த அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உரிய பராமரிப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிராமையால் பிரதான கால்வாய் வழி தடைப்பட்டு நீர் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டிருந்தது. இவ்வாறே உரிய இயந்திர உபகரணங்கள்

செயற்திட்டத்தின் நடவடிக்கைகளுக்குப் புறம்பான வேறு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.2 முகாமைத்துவ திறமையீனங்கள்

---------------------------------------------------------

சுவீகரிக்கப்பட்ட காணிகளைக் கையேற்கையில் கருத்திற்கொள்ளப்பட வேண்டிய காலதாமதம் ஏற்பட்ட காரணத்தினால் அண்ணளவாக இதற்கான வட்டியாக ரூபா 243,620,863 தொகை வெளித்தரப்பினர்களுக்குச் செலுத்த வேண்டிய ஆபத்தான நிலையுள்ளமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்

---------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான வாகனங்களுக்காக தலைமைக் காரியாலயத்திற்கு அண்மையில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருள் பெறப்படாது நாவலவில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் இருந்து எரிபொருள் பெறப்பட்ட காரணத்தினால் ஒரு கிலோ மீற்றருக்கு செலவிடப்பட்ட சராசரி கிரயத்தின் பிரகாரம் கணிப்பிடுகையில் 2010 ஆம் ஆண்டிற்காக எரிபொருள் பெறப்படுவதற்கான மேலதிக போக்குவரத்துச் செலவினம் ரூபா 623,160 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) 1996 ஆம் ஆண்டு முதல் இலங்கை மெஷின் லீஸஸ் கம்பனியில் ரூபா 1,100,000 முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதலீடு செய்யப்பட்ட மொத்தத் தொகைக்கு பெறுமதி குறைந்ததன் காரணமாக கணக்குகளில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மேலும் முதலீட்டுத் தினத்தில் இருந்து இது வரையில் எவ்வித முதலீட்டு நலன்களும் கூட்டுத்தாபனம் பெற்றிருக்கவில்லை.

(இ) 1998 ஆம் ஆண்டின் போது வரையறுக்கப்பட்ட ரீல் எஸ்டேட் தனியார் கம்பனியின் ரூபா 2 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் இதற்காக கூட்டுத்தாபனத்திற்கு ஒரு தடவையேனும் பங்கிலாபம்

கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. தற்போது இக் கம்பனி கலைக்கப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் ரூபா 30.11 மில்லியன் தொகையான செலவினம் ஏற்கப்பட்டு செயற்படுத்தப்பட்ட பின்வரும் செயற்திட்டங்கள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அத் தொகையை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

| **செயற்திட்டம்** | **செலவினம்** |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| என்டேரமுல்ல நகர அபிவிருத்தி | 21.14 |
| பேர வாவி திறப்பு | 8.97 |
| கூட்டுத்தொகை | 30.11 |

பேர வாவி திறப்பதற்கான செயற்திட்டத்திற்கான நிதிகள் துறைமுக அதிகாரசபை கூட்டுத்தாபனம் வழங்கியிருந்ததுடன் கூட்டுத்தாபனம் வாவியைத் திறக்கும் போது முறையான மண் அகற்றும் செயற்பாடுகளை கொண்டிராமையால் வாவி திறக்கப்படும் செயற்பாடு 2009 ஆம் ஆண்டு முதல் இடைநிறுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(உ) மினுவாங்கொடை மற்றும் கிரிபத்கொட செயற்திட்டங்களின் கிரயங்கள் முறையே ரூபா 8,814,388 தொகையும் ரூபா 12,506,116 தொகையும் மீளாய்வாண்டின் போது பதிவழிக்கப்பட்டிருந்தது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது கூட்டுத்தாபனத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வாகனப் பயன்பாடு

(ஆ) வருமானங்கள் கணக்கிடப்படுதல்

(இ) கடன்பட்டோரிடம் இருந்து பணம் அறவிடப்படுதல்

(ஈ) வாடிக்கையாளர்களிடம் இருந்து முற்பணம் பெற்றுக்கொள்ளல்